# இராமேஸ்வரத்தின் தொன்மை – தொல்லியல் அறிமுகம்

வே.பரந்தாமன் மற்றும் அ.பிரேம் குமார்
ரீச் பவுண்டேஷன், சென்னை

## முன்னுரை

“வரலாறு” என்பது ஒவ்வொரு மனிதன் மற்றும் சமூகத்தின் தனித்துவத்தையும், சமூக ஒற்றுமையையும் கூறும் வகையில் உள்ளன என்றால் அது மிகையாகாது. அவ்வகையான சிறப்புகளைப் பெற்ற வரலாற்றை அறிய முதலில் நாம் அனைவரும் எடுத்துக்கொள்வது தொல்லியல் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள், அயல்நாட்டவர் குறிப்புகள் போன்றவைகள் முதன்மை பெறுகின்றன. இது போன்ற ஆதாரங்களை திறம்பட எடுத்து ஒரு நுண்ணாய்வுகளின் அடிப்படையில் வரலாற்றை நாம் வரைய வேண்டும். அது போல் ஒரு சமூகம் நாகரீகத்தை அடைவதற்கு பல நூற்றாண்டு காலம் எடுத்துக்கொள்ளும். அவ்வாறு உருவான ஒரு நாகரீக சமூகத்தின் வரலாற்றை திறம்பட கல்வெட்டு மற்றும் தொல்லியல், அயல் நாட்டவர் குறிப்புகள் மற்றும் இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் வரைந்து வருங்கால சமுதாயத்திற்கு தெளிவான வரலாற்றை எடுத்துரைப்பது நம் கடமையாகும். இவ்வாறு நாம் எழுதக்கூடிய வரலாற்றில், இலக்கியத் தரவுகளின் மூலம் காணப்படும் தொல்லியல் இடங்கள், கல்வெட்டுக்கள், கலை, கட்டிடக்கலை போன்றவற்றை முறைமைப்படுத்த வேண்டும்.



PLAN SHOWING THE POSITION OF RAMESWARAM ON THE INDIAN PENINSULA

இந்தியாவின் வரலாறு உலகிலேயே மிகத்தொன்மையான வரலாறாகவும், பழைமையான கலாச்சாரப் பண்பாடுடைய ஒரு சமூகமாகவும் திகழ்கின்றது. அதுபோன்று தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாறு மிகத் தொன்மையான வரலாறாக உள்ளது. தமிழக நாகரீகம் சுமார் 2500 வருடம் பழமையான வரலாறு என இதுவரை கிடைத்துள்ள தொல்லியல் மற்றும்

கல்வெட்டுச் சான்றுகளும் கொடுக்கின்றன. தமிழகத்தில் கிடைக்ககூடிய முதல் குறியீடு ஈரோடு மாவட்டம் நொய்யல் ஆற்றங்கரையில் உள்ள சங்ககால ஊரான கொடுமணல் என்ற இடத்தில் அகழாய்வில் கிடைத்துள்ளது. அதுபோல் நடுகற்களில் தேனிமாவட்டம், புலிமான் கோம்பை என்ற ஊரில் சங்ககால நடுகல்லில் தமிழ்-பிராமி எழுத்து கிடைத்துள்ளது. இவ்விரு ஊரில் கிடைத்த குறியீடுகளும், எழுத்துக்களும் இலக்கியத் தரவுகளின் அடிப்படையிலும், தொல்லியல் மேற்பரப்பாய்வின் மூலமும் அகழாய்வு செய்யப்பட்டதாகும்.

இராமநாதபுரம் மாவட்டம் தமிழகத்தின் தென்கிழக்கே சிவகங்கை மாவட்டத்தின் தெற்காகவும், விருதுநகர் மாவட்டத்தின் கிழக்காகவும், கிழக்கே வங்கக்கடல் என்று உள்ளது ஆகும். பொ.ஆ.1910ல் மதுரை மற்றும் திருநெல்வெலி மாவட்டங்களில் சில பகுதிகளை பிரித்து இம்மாவட்டத்தைப் உருவாக்கப்பட்டது. இம்மாவட்டத்தில் பரமக்குடி, கமுதி, முதுகுளத்தூர், கடலாடி, கீழக்கரை, இராமநாதபுரம், தொண்டி மற்றும் இராமேஸ்வரம் போன்ற வட்டங்கள் உள்ளடங்கியதாகும். இராமேஸ்வரம் பகுதி மதுரை மாவட்டத்திலிருந்து கிழக்கே 160 கி.மீ தொலைவில் இராமநாதபுரம் வட்டத்திற்கு கிழக்கே உள்ளது. இராமேஸ்வரம் வட்டத்தில் பாம்பன், தங்கச்சிமடம், இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி போன்ற ஊர்கள் மிக முக்கியமானதாக உள்ளது. இத்தீவைச் சுற்றி வங்கக்கடல், பாக் ஜலசந்தி மற்றும் இந்துமாக்கடல் போன்றவையால் சூழப்பட்டுள்ளது. இங்கு மக்களின் மிக முக்கியமான வாழ்வாதாரம் என்று பார்க்கும் போது மீன்பிடித்தல் மற்றும் சங்கு வியாபாரம் போன்றவையாகும். விவசாயம் என்பது மிக சொர்ப்பமான ஒன்றாகும்.



## ஊர்ப்பெயர்காரணம்

இராமேஸ்வரம் இராமநாதபுர மாவட்டத்திலேயே புராண இதிகாசங்களில் வரக்கூடிய மிக முக்கியமான ஊராக உள்ளது. இவ்வூரை தேவாரத்தில் மூவராலும் பாடப்பெற்ற பாடலில் "திருவிராமேச்சுரம்" என்றும் கல்வெட்டுக்களில் "ராமீச்சுரம்"(தெ.இ.க.தொ-3, எண்,384) என்றும் செப்புப்பட்டையங்களில் "இராமேஸ்வரம்" என்றும் உள்ளது. சமஸ்கிருதத்தில் "தேவநகரம்" என்று கூறப்படுகின்றது.

இராமாயணத்தில் இலங்கையிலிருந்து இராமர் சீதையை இராவணனிடமிருந்து மீட்டு வருகின்றார். அப்போது இராமேஸ்வரத்தில் மணலால் சிவலிங்கத்தை பிரதிட்டை செய்து, இராவணன் என்ற பிராமணனை கொன்றதால் ஏற்பட்ட பிரமஹத்தி தோஷம் விலகும்பொருட்டு இராமன் பூஜை செய்யபட்ட இடமாகவும், இராமன் சிவனை வழிபட்டதால் "இராம-ஈஸ்வரம்" என்று பெயர் வந்ததாகும். இதுபோன்று தனுஷ்கோடி, பாம்பன், தங்கச்சிமடம், அறியாங்குண்டு போன்ற இடங்கள் இது போன்ற சிறப்புப் பெயர்களைக் கொண்டுள்ளது.

## வட்டார நிலவியல் கூறுகள்

இப்பகுதியைச் சுற்றி மணல் திட்டுகள் சிறு சிறு குன்றுகளாக காட்சியளிக்கின்றன. இராமேஸ்வரத் தீவில் கந்தமான பருவதம் என்ற ஊரில் திரு இராமர் பாதம் உள்ள பருவத மலையே இங்குள்ள பெரிய மலையாகும். மற்ற இடங்களில் காணப்படும் குன்றுகள் அனைத்தும் காற்று சுழற்ச்சியினால் ஏற்பட்ட மணல் திட்டுகளாகும்(sandune). மேலும் இத்திடுகளில் பெரும்பாலானவை 1964ல் ஏற்பட்ட கடல் சீற்றத்தினால் உறுவானவை ஆகும். இங்கு அதிகம் மணல்பரப்பு அதிகமாக உள்ளதால் மற்ற விவசாயங்களை விட தென்னை, முந்திரி மரங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகிறன.

இப்பகுதியில் தாவரங்கள் என்று பார்க்கும்பொழுது வட்டார வகைத் தாவரங்கள் மிக அதிகமாக உள்ளன. குறிப்பாக கருவை, முந்திரி, வேளா மரம், புங்கை, புளி, புன்னை, பனை, வேம்பு, வாகை போன்றவகளாகும். சிறு சிறு பத்தைகளும் இப்பகுதியிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. சிறிய தாவரங்களாக தும்பை,துளசி, கொழுஞ்சி, அறுகு, ஆடாதொடா, சிறியா நங்கை, தொட்டால்சினுங்கி, போன்றவைகள் காணப்படுகின்றன. மேலும் கடற்கரைப் பகுதிகளில் கடற்பாசிகள், ஆகாயத்தாமரை, போன்றவகளும் காணப்படுகின்றன. எனவே இப்பகுதியில் வரலாற்றுக்கு முந்தையகால மனிதர்களின் வாழ்விடங்களும், துறைமுகங்களும் உருவாக ஏதுவாக உள்ளன.

## ஆறுகள்

இப்பகுதி அறியாங்குண்டு ஊரின் வடக்கே பஞ்சகிளி ஆறு ஓடியதாக ஊர்மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் பாம்பன் பகுதி இதற்கு முன்னால் ஒரு சிறு ஓடையாக இருந்ததாகவும் பொ.ஆ.1480-ல் ஏற்பட்ட கடல் கோலால் இந்தியப்பகுதியிலிருந்து பிரிந்து தீவாக மாறியதாகவும் கூறப்படுகின்றது. இதன் பிறகு திருமலை நாயக்கனின் தளபதியான இராமப்பஜய்யன், சடையக்க தேவர் என்ற தளவாய் சேதுபதி (பொ.ஆ.1635-1646) மீது படையெடுத்தபோது, சேதுபதி இந்த தீவுக்குள் ஒளிந்துகொண்டதால் அவனை பிடிக்க, தன் படைகளை அனுப்ப தளபதி இராமப்பைஜய்யன் முதல் முறையாக ஒரு பாலத்தைக்கட்டினான். இதை மெய்ப்பிக்கும் வகையில் தங்கச்சிமடம் முருகன் கோயில் கல்வெட்டு "பாம்பனாற்றுக்கு கீழ்பார்க்கும்" எனு கூறப்படுகின்றது.

## மலைகள் மற்றும் பாறைவகைகள்

Most of the area is covered by the unconsolidated sediments of quarternary age except in the northtwestern part, where patches of Archaen crystallines and tertiary sandstone are exposed. The Archaeans are mainly represented by the charnockite Group of rock comprising garnetiferrous granulite and thte khondalite group of rock made up of quartzite of genesses.

The teriary sandstone (cuddalore formation) comprise pinkish, yellowish, reddish (variegated colours) medium to coarse grained sandstone and clay stone. It is overlain by thin alluvium and exposed towards north of Vaigai River.detached exposures of latrite and lateritic soil are seen in the northwestern part of the district.

In Rameshwaram island, the fluvio-marine deposits include indurated sand and dune sand.the Aeolian deposites comprises red sand which are in nature of ancient dune and occur over a 3.2Km and 8 Km long stretch and lie parallel to the sea coast. Thesesare separated by marshy deposite of black clays. The sands are underlain by calcareous hardpan. In Rameshwaram island also brown sand deposits occur around sambaimadam on either saide of NH 49 west of town. Rameshwaram island contains mainly sandy soil and large quantitis of limestone deposites. The sand deposite of 80% and clay deposite are 20% I rameshwaram region (*net collection)*

இப்பகுதியில் gypsum, limonite, granet sand, lime shells, clay and other available from here. இம்மாவட்டத்தில் மலைகள் காணப்படுவதில்லை, ஆனால் சமவெளிப்பகுதிகள் அதிகம் உள்ளன. பெரும்பாலான பகுதிகள் செம்பூரான் பாறைவகை மண்ணடுக்குகள் மிக அதிகமாகும். இராமேஸ்வரம் பகுதியில் மணற்பாறைகள், சுண்ணாம்புப் பாறைகள், சங்கு மற்றும் கிளிஞ்சல்களின் மண்ணௌக்குகள் போன்றவகள் காணப்படுகின்றன. ஒருசில இடங்களில் மணல் மீண்டும் மணற்பாறையாக உருவாகும் தன்மையை பாக்கலாம். எடுத்துக்காடாக பருவதம் பகுதியில் மணல்திட்டுகள் இறுக்கம் கொடுத்து மீண்டும் பாறையாக உறுமாறுவதைக் காணலாம். சுண்ணம்புப்பாறைகள் மிக அதிகமாக நரிக்குழி, வடகாடு, சமபை, பருவதம், ஏரகாடு மெய்யம்புளி புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன. இராமநாத சுவாமி கோயில் மற்றும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகளில் மணற்பாறைகள் காணப்படுகிறன. இராமநாத சுவாமி கோயில் கட்டிடம் மணற்பாறையின் மேல்தான் கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள அனைத்துக் கோயில்களையும் மணற்பாறையினாலேயே கட்டப்பட்டுள்ளது. ஆனால் சிம்மமட்டம் தரவைத் தோப்பு மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளில் செம்மன் வகைகள் காணப்படுகின்றன. இப்பகுதியில் ஒரு நிலையற்ற வாழ்விடங்கள் மிக அதிகமாக காணப்படுகின்றன. ஏனென்றால் அவ்வப்போது ஏற்படும் ஆகோல்களினால் நிலப்பரப்பானது அழிக்கப்பட்டு மீண்டும் குடியிருப்புகள் உருவாகின்றன. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு சங்ககால பாடலிலும், பொ.ஆ.1480ல் ஏற்பட்ட புயலும் கடற் கொந்தளிப்புந்தான் பாம்பன் கால்வாய் ஏற்படக் காரணமாக அமைந்தது. மண்டபத்திற்கும் பாம்பனுக்கும் இடைப்பட்ட குறுகலான பகுதி கடலில் அமிழ்ந்து மணற் பகுதி மறைந்து பாம்பனும் இராமேஸ்வரமும் உள்ள பகுதி சிறு தீவாகியது. அடுத்தது ஏற்பட்ட புயலால் 2.7 கி,மீ தூரம் கடல்களாக மாறிவிட்டதும். அன்மையில் 1964 ல் நடந்த கடல்கோளினால் தனுஷ்கோடி முற்றிலும் அழிந்துவிட்டதை நாம் அனைவரும் அறிந்ததே. இப்பகுதியில் இந்துமாக்கடலில் முயல்தீவு, குறுசடைத்தீவு, பாம்பன் தீவு போன்ற தீவுகள் காணப்படுகின்றது. இப்பகுதியில் கடல்வாழ் உயிரினங்களும், நிலவாழ் உயிரினங்களும் அதிகமாகக் காணப்படுகின்றது.

## இராமேஸ்வரத்தீவின் முக்கியத்துவம்

இராமநாதபுரம் மாவட்டம் வரலாற்றில் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. கல்வெட்டுக்களில் “கோடி நாட்டு இராமேஸ்வரம்” என்ற பெயர்கள் காணப்படுகின்றன. எனவே பாம்பன், இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி போன்ற ஊர்கள் கோடி நாட்டுக்கு உள்ளடங்கியதாக இருந்துள்ளது. இராமேஸ்வரம் தீவு இந்தியாவிற்கும் இலங்கைக்கும் வேதகாலத்திலிருந்தே மிகப்பெரிய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்துள்ளதை மகாவம்சம், ரிக் வேதம், இராமாயணம் மற்றும் தமிழ்பிராமி எழுத்துக்கள் வணிகர்களின் பங்களிப்பு போன்றவைகள் தெரிவிக்கின்றன.

## வெப்பநிலை

தமிழ்நாட்டில் மிக அதிக வெப்பநிலையக் கொண்ட மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டமாகும். வெயில் மழைகாலங்களில் மிதமானதாகவும், கோடைகாலங்களில் மிக அதிகப்படியான வெப்பநிலையாக 48°c குறைந்தபட்சம் 46°c யாகவும், மழைகாலங்களில் அதிகபட்சம் 30°C யாகவும், குறைந்தபட்சம் 25°C யாகவும் பதிவாகின்றது. இப்பகுதியில் மழைப்பொழிவானது அதிகமாக இருந்த போதிலும் மண்ணின் தன்மையினால் விரைவில் வறட்சியை தொட்டுவிடும்.

## மழை

இப்பகுதியில் மழை என்பது மிக முக்கியமானவையாக காணப்படுகின்றது. தனுஷ்கோடியில் தென்பகுதிகளில் ஆண்டு தோரும் தென் மேற்கு பருவக் காற்றால் ஏப்ரல் 15 முதல் அக்டோபர் 15 வரை கடலால் அதிக மழை பெய்கின்றது. சூன் 15 முதல் அக்டோபர் 15 வரை இவ்வரிப்பு மிகக் கடுமையக இருக்கிறது. வடகிழக்கு பருவக்காற்றின்போது கடல் மண் கொண்டுவந்து சேர்க்கப்பட்ட போதிலும், தென்மேற்குப் பருவம் ஆரம்பமானவுடம் மீண்டு கடல் அரிப்பு ஏற்பட்டு ஒவ்வோர் ஆண்டிலும் மேலும் 20 - 30 அடி சேதப்படுகின்றது

## ஆய்வு எல்லை

இந்த நூல் இராமமேஸ்வரம் மட்டும் இல்லாமல் பாம்பன், தனுஷ்கோடி, தங்கச்சிமடம் மற்றும் இதோடு சேர்த்து. மண்டபம் பகுதிகளை உள்ளடக்கி எழுதப்படுள்ளது. இராமேஸ்வரத்திலுள்ள ஒவ்வொரு தொல்லியல் இடங்கள், கோயில்கள், கல்வெட்டுக்கள், மடங்கள், துறைமுகங்கள் போன்றவற்றோடு அன்மைகால வரலாற்றையும் தொகுத்து அளிக்க உள்ளது. இராமேஸ்வரத்தை மையப்படுத்தப்பட்டு இப்பகுதியிலுள்ள அனைத்து ஊர்களையும் பற்றிய வரலாறு மற்றும் தொல்லியலை வெளிக்கொணர்வதே இதன் நோக்கமாகும்.

## முந்தைய ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டத்தில் அன்மையில் பல அகழாய்வுகளும், மேற்பரப்பாய்வுகளும் நடைபெற்றுள்ளன.கல்வெட்டு மற்றும் செப்பேடுகளின் வாயிலாக வரலாற்றுக்காலத்தைச் சேர்ந்த வரலாற்றினை எஸ்.எம்.கமால் என்பவர் தெளிவாக விளக்கியுள்ளார். இருந்த போதிலும் ஒரு முறையான மேற்பரப்பாய்வினை செய்து இம்மாவட்டத்தின் வரலாறு மற்றும் தொல்லியல் சான்றுகளை கொடுக்கவில்லை. அகழாய்வு செய்யப்பட்ட தொல்லியல் இடங்களான மிக அருகாமையில் உள்ள பெரியபட்டணம், தொண்டி(2004), அழகன்குளம் (1986,2005,2015) ஆகிய இரண்டு ஊர்களிலும் மிக முக்கியமான தொல்லியல் தடையங்கள் கிடைத்துள்ளன. இம்மாவட்டத்தின் மிகப் பழமையான எழுத்துக்கள் அழகன் குளம் அகழாய்வில் கிடைத்துள்ளன. “சமுதப”, “ஆதன்” போன்ற தமிழ்பிராமியில் வணிகர்களின் பெயர்கள் வருகின்றன். கருப்பு சிவப்பு, சிவப்பு மற்றும் கருப்பு நிறப் பானை ஓடுகளும், நாவாய் என்ற கப்பல் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் கிடைதுள்ளன. (*அழகன்குளம் அகழாய்வு அறிக்கை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை* 2005).

K.Rajan,V.P.Yathees kumar, S.Selvakumar, 2009, Catalogue of Archaeological Sites in Tamil Nadu Vol.II, Heritage India Trust, Thanjavur என்ற நூலில் அழகன்குளம், அறியாநேந்தல், நெடுங்குறிச்சி, பரளி, இராமநாதபுரம், தேரிருவேளி, தொண்டி, உரத்தூர் போன்ற இடங்களைச் சுட்டியுள்ளார்.

எனவே இராமேஸ்வரத்தில் இந்திய அரசின் கல்வெட்டு ஆண்டறிக்கை (1903:97-105, 1905:89-90,1915:8-9,1949;326,1960;1960:61-290) மற்றும் தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் (Vol.VIII) என்ற நூலில் இராமநாத சுவாமி கோயில் வெளிவந்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டம் (1984), சேதுபதி மன்னர்கள் வரலாறு( 2002), இராமன் செய்த கோயில், (2004), சேதுபதி கல்வெட்டுகள் (2002), சேதுபதிகள் செப்பேடுகள் (1992), போன்ற நூல்களில் வரலாற்றுக்கால வரலாற்றைக் கூறியுள்ளார். புலவர் செ.இராசு சேதுபதிகள் செப்பேடுகள் (1994) என்ற நூலில் சேதுபதி மன்னர்களின் செப்பேடுகளைத் தொகுத்து அளித்துள்ளார். G.சேதுராமன் Rameshwaram temple-A historical study (1985), என்ற தன்னுடைய முனைவர் பட்ட ஆய்வேட்டில் இராமநாதசுவாமி கோயிலைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளார்.

1. இராமசாமி.அ,1990 தமிழ்நாடு மாவட்ட விவரச்சுவடிகள், அ.இராமசாமி,ப-1
2. சோமலெ,1990த மிழ்நாட்டு விவரச்சுவடி, இராமநாதபுரம், ப-1179
3. சோமலெ,1990, தமிழ்நாட்டு விவரச்சுவடி, இராமநாதபுரம், ப-1170
4. கமால்.எஸ்.எம், நா.முகமது செரீப்,1984, இராமநாதபுரம் மாவட்டம்,லெனின் சமூக வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம், பரமக்குடி, ப-20
5. கமால்.எஸ்.எம், நா.முகமது செரீப்,1984, இராமநாதபுரம் மாவட்டம்,லெனின் சமூக வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம், பரமக்குடி, ப-39
6. சோமலெ,1990, தமிழ்நாட்டு விவரச்சுவடி, இராமநாதபுரம், ப-1119